2005 ஏப்ரல் 11]

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த வினாவிற்கு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 334, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

334—

மாணவர் விடுதி

***42098—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமம் என்பது கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய ஒரு கடைக்கோடி பகுதியாகும். அங்கே அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அரசு விடுதி அமைக்கும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தில் ஊத்தங்கரையிலேயே பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியினுடைய

மாணவர் விடுதி இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருடைய நல விடுதிகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய முடிவு எடுக்கப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று 972 விடுதிகளில் 770 தனியார் விடுதிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுடைய அடிப்படை வசதிகள் இல்லாமல் வேதனைப்படுகின்ற நிலைமை அறிந்து நிதிநிலைமையினுடைய சிரமம் இருந்தாலும்கூட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய மாணவச் செல்வங்களுடைய நலன் பேணி, இன்று 630 விடுதிகள் கட்டக்கூடிய திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், இருக்கின்ற விடுதிகளிலேயே ரூபாய் 31 இலட்சம் ஒதுக்கி, 775 கூடுதல் மாணவர்கள் சேர்ந்து படிக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அத்திப்பாடியில் விடுதி தொடங்கும் திட்டம் இந்த ஆண்டு பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு திட்டத்தில் இல்லை என்று குறிப்பிடுகிறார். ஆனால், இந்த அத்திப்பாடி என்கின்ற கிராமம் எங்கள் மாவட்டத்தினுடைய கடைசி எல்லையில் இருக்கிறது. அங்கிருந்து அதிக தூரம் சென்றுதான் மாணவர்கள் விடுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் சென்றால் விடுதியில் இடம் இல்லையென்று சொல்லிவிட்டால், அந்த மாணவர்களுக்கு படிக்கின்ற வாய்ப்பு கெட்டுப் போய்விடுகிறது. அவர்கள் அந்த வாய்ப்பை இழக்கிறார்கள். அது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மிக அதிகமாக படிக்கிற ஒரு பள்ளியாகும். இந்தப் பள்ளி மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், இங்கே ஒரு விடுதி அமைக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கட்டிக் கொடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகாலிங்கம்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசையை நோக்கி பாதம் பணிந்து வணங்குகிறேன். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, அந்தக் குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீக்கப்படுகிறது. உட்காருங்கள்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் கல்லாதவர்கள் இல்லையென்ற சூழ்நிலை உருவாக்குவதற்காக..

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். மகாலிங்கம்: பல்வேறு நலத் திட்டங்களை நாள்தோறும் அறிவித்து வருகிறார்கள். அதன்மூலமாக கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 31 இலட்சம் ரூபாயிலே நல்ல ஆய்வுக்கூடம் கொண்ட பள்ளிக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார்கள். அதற்காக அந்தப் பள்ளி மாணவர்கள் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 700–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வரும் அந்தச் சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே நடப்பு நிதியாண்டிலே புதிதாக அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக மாணவர் விடுதி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதியில் தேவைக்கு ஏற்ப, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

2. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் அமைப்புகளில் உள்ள காலியிடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. ப. இராஜரெத்தினம் 2. திரு. ஜி. கோதண்டராமன் 3. திரு. துரை கி. சரவணன்
2. சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. சி. துரைராஜ்
3. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. முனைவர் செ.கு. தமிழரசன்
4. தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம்	1. திரு. செ. தாமோதரன் 2. திரு. பி.ஜி. இராஜேந்திரன் 3. திரு. என்.ஆர். ரங்கராஜன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களுடைய எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5–12–2007 வரை ஆகும்.

TRUTH ALONE TRIUMPHS